# பிரிக்ஃபீல்ட்ஸில் தீபாவளி குதூகலம்



கோலாலம்பூரின் புக்கிட் ஜலில் விளையாட்டு அரங்கிற்கு வெளியே அமைந்திருந்த மற்றொரு தீபாவளிச் சந்தையில் மக்கள் திரளாக வந்து தங்கள் பண்டிகைக் காலத் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்கின்றனர்.

**படம்: அஜெண்டா சூரியா கம்யூனிகேஷன்ஸ் நிறுவனம்**

*வழக்கமாக சிங்கப்பூரர்கள் சிராங்கூன் சாலையிலும் சில சமயங்களில் ஜோகூர் பாரு தீபாவளிச் சந்தையிலும் தீபாவளிக்குத் தேவையான பொருட்களை வாங்குவர். மலேசியாவின் தலைநகரமான கோலாலம்பூரில் கொண்டாட்டங்கள் எப்படி இருக்கின்றன என்பதை அறிந்து வந்தது தமிழ் முரசு செய்திக்குழு.*

கோலாலம்பூரிலிருந்து
ப. பாலசுப்பிரமணியம்

நகர்ப்புறத்தில் வசிப்பவர்கள் அல்லது வேலை செய்வோர் பாரம்பரிய உடைகள், பூசைப் பொருட்கள் வாங்குவதற்கும் விதவிதமான இந்திய உணவைச் சுவைப்பதற்கும் ஏற்ற இடமாக கோலாலம்பூரில் இருக்கும் லிட்டில் இந்தியா பகுதி விளங்குகிறது.

தீபாவளிக்கு முந்தைய சனிக் கிழமையன்று அங்கு சென்றிருந்த போது மாலை வேளையில் கடைகளில் விற்பனை மந்த மாகவே இருந்தது. ஆனால் இரவு நேரம் நெருங்க, நெருங்க கூட்டம் லிட்டில் இந்தியா சாலைகளிலும் அங்கு சிறப்பாக அமைக்கப்பட்டிருக்கும் தீபா வளிச் சந்தையிலும் நிரம்பி வழியத் தொடங்கியது.

சிறப்பு தீபாவளிச் சந்தையில் பெண்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் சேலைகள் முதல் பஞ்சாபி ஆடைகள் வரையில் குவிந்திருந்த உடை வகைகள் ஏராளம்.

இதற்கு மேலாக, குத்து விளக்குகள், தெய்வ, அலங்காரச் சிலைகள், ஊஞ்சல்கள், 'பிரீமியர் குக்கர் வகைகள்', தரை விரிப்புகள் போன்ற இதர பொருட்களும் இந்த சந்தையில் இருந்தன.

கடந்த 28 ஆண்டுகளாக மலேசியாவின் பினாங்கு, குவாந் தான், பேராக் போன்ற இடங்களில் இருக்கும் விற்பனைச் சந்தைகளில் சேலைகளை விற்று வருகிறார் 43 வயது திரு செல்வம் ராஜு.

கடந்த ஆண்டு ஷா அலாம் தீபாவளிச் சந்தையில் கடை வைத்திருந்தபோது மக்களிடம் வரவேற்பு நன்றாக இருந்தது என்று குறிப்பிட்ட திரு செல்வம், இதுவரையில் வியாபாரம் சூடு பிடிக்கவில்லை. ஆனால் தீபா வளிக்கு ஓரிரு நாட்கள் முன்னர் தான் நிலவரத்தைக் கணிக்க முடியும் என்றார்.

## பிரிக்ஃபீல்ட்ஸ் பின்னணி

கோலாலம்பூரின் பிரிக்ஃபீல்ட்ஸ் வர்த்தக நடவடிக்கைகளுக்கும் அதன் வரலாற்றுக்கும் அணுக்க மான தொடர்புகள் உள்ளன. கோலாலம்பூர் முழுவதும் செங்கல் விநியோகம் செய்யும் செங்கல் தயாரிப்பு நிலையமாக 1880களில் பிரிக்ஃபீல்ட்ஸ் இடம் இருந்தது.

வெள்ளீயத் தொழில் துறைக்கு ஆதரவாக அங்கு ஒரு ரயில் மையம் உருவாக்கப்பட்டதை அடுத்து 1900களின் தொடக்கத் தில் செங்கல் தயாரிக்கும் தொழில் அங்கு மெதுவாக மறைந்தது.

சிங்கப்பூரின் ஆரம்பகால கட்டமைப்புக்கும் இது ஒரு வகையில் உதவியிருக்கலாம். ஏனெனில், அங்கு தயாரிக்கப்பட்ட செங்கற்கள் சிங்கப்பூருக்கும் கப்பல் வழி இறக்குமதியாகின. தற்போது வானளாவிய அலுவல கக் கட்டடங்களும் கூட் டுரிமை வீடுகளும் முக்கிய போக்குவரத்து மையமும் இப்பகுதியில் உள்ளன.

மலேசியாவின் அரசாங்க புள்ளிவிவரத் துறை வெளியிட்ட அறிக்கையின்படி, மலேசியர்களில் 7 விழுக்காட்டினர் இந்தியர்கள். பிரிக்ஃபீல்ட்ஸ் வட்டாரத்தில் வந்து சேர்ந்த இந்தியக் குடும்பங் கள் பெரும்பாலும் ரயில் ஊழியர் களாக வந்து சேர்ந்தனர். அர சாங்க வீடுகள் பிரிக்ஃபீல்ட்ஸில் அமைக்கப்பட, இந்திய அரசாங்க ஊழியர்களும் அப்பகுதியில் தங்கத் தொடங்கினர்.

சுமார் ஆறு ஆண்டுகளுக்கு முன்புதான், பிரிக்ஃபீல்ட்ஸின் ஒரு பகுதியாக லிட்டில் இந்தியா அமைக்கப்பட்டது. வண்ண மயமான அலங்கார வளைவுகள் கொண்ட லிட்டில் இந்தியா சாலையை மலேசியப் பிரதமர் நஜிப் ரசாக், முன்னாள் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் ஆகியோர் திறந்து வைத்தனர்.

இந்த லிட்டில் இந்தியா பகுதி அமைக்கப்படுவதற்கு முன், கோலாலம்பூரில் வசிப்போர் கிள்ளான், லெபொ அம்பாங் பகுதிகளுக்குச் சென்று தீபா வளிக்கு தேவையான பொருட் களை வாங்கினர்.

## பிரிக்ஃபீல்ட்ஸ் எதிரே நவீன ஹோட்டல்



பிரிக்ஃபீல்ட்ஸ் லிட்டில் இந்தியா வட்டாரத்திலிருந்து இரண்டு நிமிட நடைப்பயணத்தில் நவீன 'லாஃப்ட் கோலாலம்பூர் சென்ட்ரல் ஹோட்டலை' அடைந்துவிடலாம்.

2013ஆம் ஆண்டில் கட்டப் பட்ட இந்த 30 மாடி நவீன நான்கு நட்சத்திர விடுதி மொத்தம் 482 அறைகளைக் கொண்டுள்ளது.

கோலாலம்பூரின் புதிய வர்த்தக மையத்தில் அமைந் துள்ள இந்த விடுதி கோலாலம்பூர் சென்ட்ரல் ரயில் நிலையத்துக்கு எதிரில் அமைந்துள்ளது. கோலாலம்பூர் அனைத்துலக விமான நிலையத் திலிருந்து 'எக்ஸ்பிரஸ் ரயில் லிங்க்' சேவை வழி 28 நிமி டங்களில் கோலாலம்பூர் சென்ட்ரலை அடைந்துவிடலாம்.

ஹோட்டலில் தங்கியிருப்பவர் களின் வசதிக்காக (NuSentral) 'நுசென்ட்ரல்' கடைத் தொகுதிக்கு நேரடியாகச் செல்லும் இணைப்புப் பாதையை அந்த விடுதி அமைத்துள்ளது.

மேலும், தேசிய அரும் பொருட்காட்சியகம், பறவைப் பூங்கா, 'லேக் கார்டன்ஸ்' போன்ற சுற்றுலாத் தளங்கள் இந்த விடுதியிலிருந்து வெகு தூரத்தில் இல்லை.

சிங்கப்பூரிலிருந்து 'ஃபையர் ஃப்ளை' விமானம் வழி மலேசியாவின் சுபாங் விமான நிலையத்திற்குச் சென்றிடலாம். விமானப் பயணம் சுமார் 80 நிமிடங்கள் என்றாலும் 'ஆப்பிள் ஜூஸ்', வாழைப்பழ 'கேக்' போன்றவை பயணிகளுக்கு வழங்கப்படுகின்றன. விமான நிலையத்திலிருந்து சுமார் 25 நிமிடங்களில் டாக்சி வழி 'லாஃப்ட் கோலாலம்பூர் சென்ட் ரல் ஹோட்டலை' அடையலாம்.

இந்தப் பயணத்திற்கு ஆதரவு வழங்கியவர்கள் 'டூரிசம் மலேசியா', 'ஃபையர்ஃப்ளை' விமானம், 'லாஃப்ட் கோலாலம்பூர் சென்ட்ரல் ஹோட்டல்'.



கண்ணைப் பறிக்கும் வண்ண வளையல்களையும் காப்புகளையும் 25 ரிங்கிட் விலை முதல் வாடிக்கையாளர்கள் வாங்கிச் சென்றனர். சேலைகள் 50 ரிங்கிட் விலையிலிருந்து விற்பனையாகின. அழகான பாரம்பரியக் காலணிகள் 35 ரிங்கிட்டிலிருந்து விற்கப்பட்டன.



கோலாலம்பூரின் லிட்டில் இந்தியா பகுதியில் தீபாவளி அலங்கரிப்பு விளக்குகள் மினுமினுக்க, சாலை முழுவதும் வாகனங்கள் வந்து குவிய, எங்கு திரும்பினாலும் துடிப்பான தமிழ்ப் பாடல்கள் காதில் ஒலிக்க தீபாவளி கொண்டாட்ட உற்சாகம் சூடுபிடித்துள்ளது.



அலங்காரப் பொருட்களை வாங்க வந்த சிலர், "இதனை வீட்டில் பொருத்தினால் எப்படி இருக்கும்," என்று தீபாவளி அலங்கரிப்புப் பொருட்களை கைகளில் எடுத்துப் பார்த்து கற்பனையிலும் மிதந்தனர்.

**படங்கள்: திமத்தி டேவிட்**



மளிகைப் பொருட்களைப் பார்த்துப் பார்த்து வாங்குவதில் பெண்கள் தீவிரம் காட்டினர். ஒட்டுமொத்தமாக ஒரே கடையிலிருந்து தீபாவளி பலகாரங்களை வாங்குவோர் பேரம் பேசுவதில் ஈடுபட்டனர்.

HMH INTERNATIONAL EDUCATION CONSULTANTS
(Recruitment Agent for Annamalai University)

- Quality And Student-friendly Distance Learning Programmes of ANNAMALAI UNIVERSITY
- Examinations in SINGAPORE
- Successful completion of more than a decade in SINGAPORE

ANNAMALAI UNIVERSITY
- Member of Association of Commonwealth Universities
- Member of International Council for Distance Education
- Known as Model University for Distance Education
- Credited with the largest enrolment of students
- Affordable fees • Result-oriented approach

PROGRAMMES OF ANNAMALAI UNIVERSITY:
- MBA E-Business, M.B.A. • MBA International Business
- MBA Human Resource Management • MBA Marketing Management
- MBA Financial Management • MBA Information Systems
- BBA Computer Applications • B.Com. Computer Applications
- Master of Computer Applications (MCA) (Latest Syllabus)
- M.Sc. Information Technology
- Bachelor of Computer Applications (BCA) (Lateral Entry To BCA II Year for all Diploma Holders)
- M.A.Tamil, M.Com, B.B.A., B.ED, B.A.Tamil,
- B.Com, B.Sc. & Other U.G., P.G. & Diploma Courses

For Admission Contact Immediately:

HMH INTERNATIONAL EDUCATION CONSULTANTS
1, Sophia Rd, #03-40, Peace Centre, Singapore 228149.
Tel: 6336 7078 / 6336 4394 / 6336 5734. Fax: 6336 7017 Email: hmhiec@singnet.com.sg
Working Hours: 9.30 am to 7.30 pm (Mon-Sat), 10.00 am to 1.00 pm (Sunday)

வேலை இடத்தில் விபத்தா?

வேலை இட விபத்துகளில் (Industrial Accidents) & சாலை விபத்துகளில் (Road Accidents) ஏற்படும் உடல் காயங்கள் (Personal Injuries) மீதான வழக்குகளில் முன்னணி வழக்கறிஞர்களில் நாங்களும் ஒருவர்.



HOH LAW CORPORATION

#B1-02, Potong Pasir MRT Station: செல்வி - 6488 4163
55 Benoi Road #01-09, Joo Koon Bus Interchange ரவி – 9725 2987

எங்களின் நிபுணத்துவ ஆலோசனையை உடனே எந்தவித கடப்பாடும் இன்றி பெற அழையுங்கள்.



அனைவருக்கும் இனிய தீபாவளி நல்வாழ்த்துகள்!



Happy Deepavali!

இன்று 29.10.2016 சனிக்கிழமை
சிறப்பு தரிசனம் காலை 7.00 மணி முதல் மதியம் 12.30 மணி வரையில்.
கோடி ஜென்ம பிராப்தமான ஹரே கிருஷ்ண பிரசாதம்!
அனைவரும் வருக வருக!

31.10.2016 திங்கட்கிழமை
நண்பகல் 12.00 மணி முதல் மதியம் 2.00 மணி வரை.
கோவர்த்தன பூஜை
சிறப்பு ஆரத்தி, மஹா அன்னதானம், ஹரே கிருஷ்ண பிரசாதம்!



ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே!
ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே!

Sri Krishna Mandir
ஸ்ரீ கிருஷ்ண மந்திர்
No.9, Geylang Lorong 29 #03-02, Singapore 388005 Tel: 6250 2280
Fax: 6250 7716 Website: www.krishnamandir.org
YouTube SriKrishnaMandirSG skm.sg
Hare Krishna Hare Krishna Krishna Krishna Hare Hare • Hare Rama Hare Rama Rama Rama Hare Hare